செ.வெ.எண்: நாள்:13.08.2021

**பத்திரிக்கைச் செய்தி**

**ஆன்லைனில் இலவசப் பயிற்சி.**

நாமக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன. **TNPSC GROUP 2 மற்றும் GROUP 4 தேர்வுகளுக்கான இலவச ஆன்லைன் பயிற்சி வகுப்பு, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டும் மையம் சார்பாக தொடங்கப்பட உள்ளது.**

இத்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் 16.08.2021 (திங்கட்கிழமை) முதல் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்துக் கொள்ள விருப்பமுள்ள மனுதாரர்கள் தங்களின் விவரத்தினை 04286-222260 என்ற தொலைபேசி வாயிலாகவோ onlineclassnkl@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது நாமக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு தங்களது பெயர், முகவரி, தொலைபேசிஎண் அடங்கிய சுயவிவரத்தினை பதிவுசெய்து பயன்பெறலாம்.

QR CODE Scanner செயலியை பதிவிறக்கம் செய்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டினை ஸ்கேன் செய்து தங்களது சுயவிவரத்தினை பூர்த்தி செய்வதன் மூலமும் இத்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயன்பெறலாம் மேலும் tamilnaducareerservice.tn.gov.in என்ற இணையதளத்தில் காணொலி வழி கற்றல், மாதிரி தேர்வு வினாத்தாள் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. தேர்வர்கள் தங்கள் பெயர், பாலினம், தந்தை மற்றும் தாய் பெயர், முகவரி, ஆதார் எண் மற்றும் வேலைவாய்ப்பு பதிவு எண்ணை கொடுத்து உள்ளே நுழைந்து போட்டித்தேர்வு என்பதை தேர்வு செய்ய வேண்டும்.

பயனீட்டாளர் பெயர் மற்றும் கடவுச்சொல் வழங்கப்படும். நாம் எந்த தேர்வுக்கு தயாராகிறோம் என்பதை தேர்வு செய்து, அதில் வரும் பாடக் குறிப்புகளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவிறக்கம் செய்யலாம். மாதிரி தேர்வுக்கான பகுதியும் கொடுக்கப்பட்டுள்ளது. மாதிரி தேர்வினை ஆன்லைனில் எழுதலாம் என நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**ஓம்/-ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**